மெய்ஞ்ஞானக்கொடி

# இந்து வேதம்

மெய்ஞ்ஞானக்கொடி

## தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்

இம்மண்ணுலகின் முதல் அரசு => பண்டைய அரசு => பாண்டிய அரசு.

**கார்த்திகை மாத வெளியீடு (Nov-Dec 2014)**

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,115

# பொய்யான ஹிந்துமதம் விளக்கக் கட்டுரைகள்



“இந்துமதம்தான் உலகுக்கும் முந்திய பரம்பரைக் குருமார்களைப் பெற்றிருக்கிறது.”

## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் அருளியவை

# உள்ளுறை

1) **மெய்யான இந்துமதமும் *பொய்யான ஹிந்துமதமும்* - பெண்ணைப் பற்றிய கருத்து.**

2) **ஆதிபராசக்தி திரைப்படத்தின் அடிப்படையில் மெய்யான இந்துமதமும் *பொய்யான ஹிந்துமதமும்*.**

3) **மெய்யான இந்துமதமும் *பொய்யான ஹிந்துமதமும்* - புராண வரலாறுகளில் ஏற்படுத்திய குழப்பங்கள்.**

4) **மெய்யான இந்துமதமும் *பொய்யான ஹிந்துமதமும்* - ஆச்சாரியார்கள் பற்றிய உகப்புரட்டு.**

5) **ஓர் இந்துமத விளக்கம் - இந்து மதமும் ஆச்சாரிய மரபும்.**

6) **இந்துமத விளக்கவுரை.**

7) **புதிய வெளியீடுகள்.**

(குருதேவர் அவர்கள் கையெழுத்துப் பிறதிகளாகவோ, வேறு விதங்களில் நகல்கள் தயாரித்தோ தமது எழுத்துக்களை தமிழகம் எங்கும் பரப்ப வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார். எனவே, குருதேவர் எழுதிய அஞ்சல்கள், கட்டுரைகள் உடையவர்கள் அவற்றை நகல்கள் எடுத்து இதுபோல் பலருக்கும் அனுப்புமாறு மீண்டும் வேண்டிக் கேட்டுக் கொள்கின்றோம்.)

ஓம்

சென்னை-11
27.8.85

# மெய்யான இந்துமதமும் *பொய்யான ஹிந்துமதமும்*

# பெண்ணைப் பற்றிய கருத்து

**பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதம்** பொருள்சார்ந்த வாழ்வின் மூலம்தான், அருள்வாழ்வு அமைய வேண்டும் என்ற தத்துவத்தையே வலியுறுத்துகிறது. அதாவது,

ஆசைகள் அனைத்திற்கும் பெண்ணே மூலகாரணம்;

உறவுகள் அனைத்துக்கும் பெண்ணே மூல காரணம்;

பொருள் உலக வாழ்வியல் அனைத்திற்கும் கருவாக, உருவாக, செயலாக இருப்பவளே பெண் ...

எனவே பெண்ணோடு இணைந்து வாழும் இல்லற வாழ்வே உண்மையான அருள்வாழ்வாகும். அதாவது இல்லறமே நல்லறம், பெண்ணின்பமே பேரின்பம், பெண்ணே விண்ணையும் மண்ணையும் இணைக்கும் சத்திச் சாதனம், ..... என்பதால் பெண்ணோடு வாழும் இல்லற வாழ்வே பத்திக்குரியது, சத்திக்குரியது, சித்திக்குரியது, முத்திக்குரியது.

இதன்படியே, பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதத்திற்குரிய பதின்மூன்று (13) ஆச்சாரியார்களும் பல திருமணங்கள் செய்து தேவைக்கேற்ப குழந்தைகளையும் பெற்று இல்லறம் எனும் நல்லறத்தை நடைமுறை வாழ்வின் (Practical Life) மூலம் உலகுக்கு அருள்நெறி முறைகளைப் புரிய வைத்தார்கள். ஆனால், *பொய்யான ஹிந்துமதம்* (The Pseudo Hinduism) எனப்படும் பிறமண்ணினரான பிருமணர்

எனப்படும் வடஆரியரின் வேதநெறியில் இளமை முதலே பெண்ணை மறுத்தும், வெறுத்தும், இழித்தும், பழித்தும், நகைத்தும், ஏளனம் செய்தும், பெண்ணில்லாத பிரம்மச்சரிய வாழ்வே பிறமாச்சாரிய வாழ்வு என்று வலியுறுத்தப் படுகிறது. அதாவது,

'பெண் பாவத்தின் சின்னம்',

'பெண் மோட்சத்திற்குத் தடை',

'பெண் பத்தி சத்தி சித்தி முத்தி வாழ்விற்குத் தீட்டு',

'மண்ணுலக வாழ்க்கைத் துன்பங்களுக்கெல்லாம் பெண்ணே காரணம்',

'பெண்ணை நம்பாதே',

'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே',

'விதவையான பெண் ஒரு கெட்ட சகுனம்',

'பேயும் பெண்ணும் ஒன்றே',

'புனித பூசைகளில் பங்கு பெறக் கூடாத புனிதமற்ற பிறவியே பெண் பிறவி',

'குருவாகவோ, ஆச்சாரியாராகவோ, மடாதிபதியாகவோ, பீடாதிபதியாகவோ இருக்கின்ற தகுதி இல்லாதவளே பெண்' .... என்று வடஆரியர்களின் வேதமதமான *பொய்யான ஹிந்துமதம்* கூறுகிறது. இல்லற வாழ்வை புறக்கணிப்பது, பெண்ணை அடிமைப்படுத்துவது, பெண்ணை ஒதுக்கி வைப்பது, பெண்ணை ஒரு போகப் பொருளாக, ஆடு மாடு கோழி போன்ற ஒரு உரிமைச் சொத்தாக, எந்த விதமான உரிமையும் இல்லாத குடும்ப அடிமையாக ... நினைக்கப்படுவதும், நடத்தப்படுவதும்தான் வடஆரிய வேதமதமான *பொய்யான ஹிந்துமதம்*.

இப்படி மலைக்கும் சிறிய கூழாங்கல்லுக்கும் இடையேயுள்ள மிகப்பெரிய வேறுபாடு போல **மெய்யான இந்துமதத்**திற்கும், *பொய்யான ஹிந்துமதத்*திற்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. இதனைப் புரியாமல் தமிழர்களே **இந்துமதமும்**, *ஹிந்துமதமும்* ஒன்றே என்று

நினைக்கின்றார்கள். இது மாற வேண்டும். **மெய்யான இந்துமதம்** என்கின்ற மலையிலிருந்து தோன்றிய ஒரு சிறிய கூழாங்கல் போன்றதே வடஆரியரின் *பொய்யான ஹிந்துமதம்.* இதற்குரிய மிகப்பெரிய தத்துவ விளக்கம்தான் பெண்ணைப் பற்றியக் கருத்து.

குறிப்பு:- பதினெண்சித்தர்களின் தத்துவப்படியே பெண்ணின் உரிமைகளையும், பெருமைகளையும் ஒப்புக்கொண்டு இந்துமதத்தின் அனைத்து வகையான கடவுள்களும், அருளாளர்களும் பெண்ணை மணந்து பெண்ணுக்கு அனைத்து வகையான உரிமைகளையும், பெருமைகளையும் வழங்கிடும் இல்லற வாழ்விற்கு உரியவர்களாக இருக்கிறார்கள்.

அனைத்து வகையான சித்தர்களிலும் [அதாவது பதினெண்சித்தர்கள் தோற்றுவித்த 48 வகையான சித்தர்களில்] ஞானச் சித்தர்கள் எனும் ஒரே வகையான சித்தர்கள்தான் மண், பெண், பொன், மது, ... முதலிய அனைத்தையும் வெறுத்து ஒதுக்குகின்ற துறவற வாழ்க்கைக்கு உரியவர்களாக இருக்கிறார்கள். அதனால்தான், இந்த ஞான சித்தர்கள் கடந்த நான்கு யுகங்களில் விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிற்கு மிகமிகச் சிலராகவே இருக்கிறார்கள். இவர்களுக்குப் பெரும்பாலும் நிலைத்த வாரிசுகள் தோன்றுவதே இல்லை.

வடஆரியர்கள் கூட தென்பாண்டித் தமிழனாகவும், வெள்ளாடை மேனியானாகவும், உச்சிக் குடுமியானாகவும் வாழ்ந்த தாந்தரீக சித்தியாளனான ஞானசித்தன் ஆதிசங்கரனை மிக எளிதாகத் தங்களுடைய வேதமதத்துக்குரிய ஆச்சாரியானாக ஆக்கிக் கொண்டார்கள். இது ஏன் முடிந்தது என்றால்; பதினெண்சித்தர்கள் தோற்றுவித்த **மெய்யான இந்துமத**ப்படி மண், பெண், பொன், மது, இறைச்சி, ... முதலிய அனைத்தையும் உரிமையோடும், பெருமையோடும் ஏற்று வாழும் இல்லற வாழ்வுதான் பத்திக்கும், சத்திக்கும், சித்திக்கும், முத்திக்கும் உரியது. ஆனால், ஒருசில

தனிமனிதர்கள் ஊழ்வினையாலும், சூழ்வினையாலும், ஆள்வினையாலும், விதியாலும், பிறப்பாலும் எதிர்பாராமல் சித்தராகிய போதும், அவரவரின் சொந்த விருப்பு வெறுப்பால்; அதாவது சுவையுணர்வால் மண்ணையும், பெண்ணையும், பொன்னையும், மதுவையும், இறைச்சியையும், பலி பூசை முறையையும் வெறுத்து மறுத்துக் கருத்துக்களைக் கூறிச் சென்றிட்டார்கள்.

இப்படிப் பட்டவர்களைத்தான் குருபாரம்பரியம் 'சித்தர் நெறியின் இலக்கணத்திற்குப் புற நடையாகத் தோன்றுகிறவர்கள் இயற்கையான மனிதப் பண்புகளுக்கு உரிய மண் இன்பம், பெண்ணின் பேரின்பம், பொன்னின்பம், மதுவின்பம், இறைச்சியின்பம், பலிபூசைப் பயன் ... முதலியவைகளை மறுக்கின்ற ஞானசித்தனின் மரபுப் படி வாழ்வார்கள்,' என்று குறிக்கின்றது. அதாவது, ஞானசித்தனின் மரபு அண்டபேரண்டமாளும் இந்துமத இலக்கணத்துக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு விதிவிலக்கேயாகும்.

இந்த விதிவிலக்கையே தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்ட பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்கள் தங்களுடைய வேதமதத்துக்குத் தென்பாண்டித் தமிழனான ஞானசித்தன் ஆதிசங்கரனை முதல் ஆச்சாரியானாக ஆக்கிக் கொண்டு விட்டார்கள். ஆனால், ஆச்சாரியான் என்ற சொல் கூட இல்லாத ஓர் அரைகுறை மதம்தான் *பிருமணர்களுடைய வேதமதம்*.

நல்லகாலமாக கலி பிறந்து 3,886 ஆண்டுகள் (மூவாயிரத்து எண்ணூற்று எண்பத்து ஆறு ஆண்டுகள்) கழித்துப் பிறந்த ஆதிசங்கரனைத் தங்களுடைய வேதமதத்தின் முதல் ஆச்சாரியானாக அறிவித்திட்டார்கள். இதுவே பிருமணர்களாகிய வடஆரியர்களின் வேத மதமான *பொய்யான ஹிந்துமதம்*.

அவர்கள் இந்தியாவிற்கு வந்து *(குருபாரம்பரியப்படி பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள் கலியுகம்*

*பிறந்து (1359) ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது ஆண்டுகள் கழித்து குடுமியும், கோலும், குடுவையும், கோவணமுமாக, ஆடு மாடு மேய்த்துக் கொண்டு இமயமலையின் கணவாய்களின் வழியாக இந்தியாவிற்குள் வந்தனர்)* ஆயிரம் (1000) ஆண்டுகள் கழித்தே தமிழ்மொழியின் அடிப்படையில் சித்தர்களின் உதவியால் சமசுகிருத மொழியைப் படைத்துக் கொண்டார்கள். அதன்பிறகே தென்பாண்டித் தமிழனை ஆதிசங்கரனைத் தங்களுடைய வேதமதத்தின் ஆச்சாரியானுக ஆக்கிக் கொண்டு விட்டார்கள்.

ஆனுல், இவர்கள் தமிழ்மொழியையும், தமிழர்களின் மதமான **மெய்யான இந்துமதத்**தையும் மூடிமறைத்துத் தங்களுடைய சமசுகிருத மொழியையும் வேத மதமான *பொய்யான ஹிந்துமதத்*தையும் தமிழர்கள் தங்களுடையவைகளாக ஏற்றுக் கொள்ளும்படிச் செய்து விட்டார்கள். இந்த மாபெரும் சூழ்ச்சிகள்தான் தமிழர்களை வீழ்ச்சியுற்று, என்றென்றும் தாழ்ச்சி பெற்று, மீட்சி பெற முடியாமல் செய்து விட்டன. எனவே, சமசுகிருத மொழியையும், *பொய்யான ஹிந்துமதத்*தையும் எதிர்த்துப் போராடி வெற்றி பெறுவதுதான் **மெய்யான இந்துமத** மறுமலர்ச்சிக்கு வழி.

இன்னும் சொல்லப் போனுல், **மெய்யான இந்துமதம்** மறுமலர்ச்சி பெற்ருல்தான் தமிழர்களின் தன்மான உணர்வு, தன்னம்பிக்கை உணர்வு, இனமான உணர்வு, இன ஒற்றுமையுணர்வு, இனப்பற்றுணர்வு, மொழிப்பற்றுணர்வு, நாட்டுரிமை உணர்வு, பண்பாட்டுப் பிடிப்புணர்வு … முதலிய அனைத்து வகையான உணர்வுகளும் விழிச்சி பெறும், எழிச்சி பெறும், வளவளர்ச்சி பெறும், கிளர்ச்சி பெறும், செழிச்சி பெறும், நலமிகு மலர்ச்சி பெறும் …”

***சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூருரின் மகன் கருவூர்த் தேவரின் குருபாரம்பரிய வாசகம்.**

[*பல இடங்களில் '*தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் மகன் கருவூர்த் தேவரின் குருபாரம்பரிய வாசகம்*' என்றுதான் நெடிய குறிப்பு உள்ளது. எனவேதான், இந்த நெடிய தொடரின் சுருக்கமாகவும், அவையடக்கமாகவும் 'சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் மகன் கருவூர்த் தேவன்' என்ற சொற்றொடர் குறிப்பும் பல இடங்களில் காணப்படுகின்றது. இது பற்றிய விரிவான விளக்கங்களை "மூவர் தோற்றம்" என்ற வரலாற்று நூலிலும், மற்ற சித்தர்களின் நூல்களிலும் காணலாம். (மூவர் = காவிரியாற்றங்கரைக் கருவூரர், மகன் கருவூர்த் தேவர், பேரன் திருமாளிகைத் தேவர்) இந்த "மூவர் தோற்றம்" என்ற நூலை எழுதிய ஆசிரியருக்கும், "தமிழ் விடுதூது" என்ற நூலை எழுதிய ஆசிரியருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இருவரும் ஒருவரே என்ற கருத்தை சித்தர் ஏளனம்பட்டியார் தமது நூலில் குறிக்கின்றார். கருவூர்த் தேவரின் காலம் கி.பி.1040-கி.பி.1182.

<u>நகல் எடுத்தவர்</u>:- அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம், ஞானக்காட்சிச் செல்வன், அருட்சேனைத் தளபதி, சித்தரடியான் ம.சி. இராமன், மதுரை - 625010. 8/9/1985.

ஓம் திருச்சிற்றம்பலம்

//உண்மை நகல்//

//இதன் மூல நகல் சித்தரடியான் திரு மா.சி.இராமன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//

---

**<u>கேள்வியும் நானே! பதிலும் நானே!</u>**

# மெய்யான இந்துமதமும் *பொய்யான ஹிந்துமதமும்*

## (The True Induism and Pseudo *Hinduism*)

# ஆதிபராசத்தி திரைப்படத்தின் அடிப்படையில்

**1) இந்தத் திரைப்படத்தில் அம்மனை (பெண் தெய்வம்) பூசை செய்யும் பொழுது, ஆட்டுத் தலையைப் பூசையில் கொண்டு வந்து வைத்தது குற்றமாகக் காட்டப்படுகிறது. அதாவது, பூசை என்றாலேயே குருதிப்பலி, இறைச்சியுணவு பயன்படுத்தாமல் மரக்கறி உணவையே (vegetarianism) பயன்படுத்த வேண்டும் என்ற கருத்து <u>வலியுறுத்தப் படுகிறது. இது சரியா? தவறா?</u>**

**பதில்:-**

உலக மதங்களுக்கெல்லாம் மூலமாகவும், முதலாகவும், ஆரம்பமாகவும், தாயாகவும் இருப்பதே பதினெண்சித்தர்கள் படைத்த **மெய்யான இந்துமதம்**. காலப்போக்கில் அவ்வப்போது சிலர் தோன்றி தங்கள் விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப ஏதேனும் சில புதிய கொள்கைகளையும், செயல்முறைகளையும் உருவாக்கிடுகின்றார்கள். ஆனால், இந்தப் புதியவையெல்லாம் உண்மையற்றவை, திண்மையற்றவை, நுண்மையற்றவை, நன்மையற்றவை, பயனற்றவை, தேவையில்லாத தீமைகளையும், தொல்லைகளையும் விளைவிப்பவை.

அதாவது, இந்தப் புதியவைகளால்தான் மதத்தின் உண்மையான பயன் விளையாமல் போய்விடுகின்றது. பதினெண்சித்தர்கள் உண்டாக்கிய **மெய்யான இந்துமதம்** வலிவோடும், வாழ்வோடும், ஆட்சியோடும் இருக்கும் பொழுதே பிறமண்ணினரான பிருமணரின் வடஆரிய வேதமதத்தால் புதிய கொள்கைகளும், செயல்முறைகளும், சமசுகிருத மொழியும் கலக்கப் பட்டே *பயனற்ற ஹிந்துமதம்* உருவாக்கப் பட்டது.

இந்த *ஹிந்துமதத்தில்*தான் முதன்முதலாக இறைச்சியுணவு மறுக்கப் பட்டது. [The rejection or condemnation of non-vegetarian food offerings in prayers is a significant difference between the True Indhuism of Siddhars and the Pseudo Hinduism of Brahmins namely the foreigners to India.] **மெய்யான இந்துமதத்**திற்கும் *பொய்யான ஹிந்துமதத்*திற்கும் உள்ள வலிவான வேறுபாடே பூசையின் போது குருதிப் பலி கொடுப்பதையும், இறைச்சியுணவுப் படையலிடுவதைச் சரியென்று ஏற்பதைத் தவறென்று மறுப்பதும்தான்.

அதாவது, இந்த நாட்டிற்கு வந்த பிறமண்ணினரான பிருமணர்கள் வடக்கே உள்ள இமயமலையின் கைபர், போலன் கணவாய் வழியாகவே தோல் கோவணமும், குடுவையும், கோலுமாக, ஆடுமாடு மேய்த்துக் கொண்டு வந்தவர்கள் என்பதால்; இவர்கள் வடஆரியர்கள் என்று குறிக்கப் படுகிறார்கள். ***இந்த வடஆரியர்களின் வேதமதம் குருதிப் பலியையும், இறைச்சியுணவுப் படையலையும் ஒப்புக் கொண்ட ஒன்றேயாகும்!***. (அதாவது, இவர்கள் இந்தியாவிற்குள் வந்து வாழ ஆரம்பிக்கும் போது.)

<u>ஆனால்</u>, இவர்கள் தமிழ்மொழியின் வளத்தால் அருட்செழிப்பு மிக்க **இந்துமதம்** இந்தியா முழுதும் பரவியிருப்பதைச் சிதைத்துச்

சீரழித்தாலொழிய தங்களுக்கு மத ரீதியான ஒப்புதலும், சமுதாய ரீதியான மதிப்பும் கிடைக்காது என்பதை உணர்ந்தனர்.

["... The foreigners namely Brahmins or North Aryans clearly understood that they cannot obtain religious recognition and social respect till the Tamilian Religion namely the Induism exist with full power and prominence in India through the Tamil Language. So, they carefully planned to exploit and pollute the sacred and true Indu Religion. They succeeded in making the immature and half-baked Sanskrit Language as the religious sacred language by replacing the Holy Tamil Language.

And with great effort they spoiled the religious history and literature by their wild imaginative non-historic Puranas and Ithihaasas. They confused the geneology of the Gods and Goddesses of the Induism by making a set of imaginary gods and goddesses and by forming a mixture of these imaginary stories with the True Indu gods and goddesses.

... In addition to that the Brahmins or North Aryans spread rumours purposely to discourage the offering of non-vegetarian food in the prayers. Through this they succeeded in their attempts aimed towards destroying the True Induism.

That is to say, only the Vegetarianism is the main cause for all the disasters, draw-backs, disabilities, disorders, downfalls and deformations of the Induism ..."

**-Taken from the writings of Mr M.Palanisamy Pillai,**
**His Holiness Siddhar Kaakkaiyar**]

<u>அதனால்தான்</u> பிறமண்ணினரான வடஆரியர்கள் **இந்துமத**த்தின் உயிர்நாடியான பூசைமுறைகளிலுள்ள குருதிப்பலி கொடுத்தலையும், இறைச்சிப் படையலையும் **<u>தடுத்து</u>** மரக்கறி உணவு உண்பதே தெய்வீக உலகுக்குச் சிறந்தது <u>என்ற மாயையை உண்டாக்கினார்கள்.</u> எனவே, பூசைமுறைகள் அனைத்தும் பயனற்றவையாக சத்தி, சித்தி, முத்தி தர முடியாதவைகளாக அருளை அநுபவப் பொருளாக வழங்க முடியாதவைகளாக ஆக்கப்பட்டு விட்டன.

இவற்றிற்கெல்லாம் மேலாக கருவறை மூலவர்கள் அனைவரும் வலுவிழந்து, நலிந்து, மெலிந்து, பூசை அவிர்ப்பலிகளை (குருதியையும், இறைச்சியையும்) விரும்பித் தேடி, கருவறைகளை விட்டு வெளியே வந்து மந்திரவாதிகளிடமும், சித்து விளையாடல்காரர்களிடமும், குறிகாரர்களிடமும் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். இதனால், பிறமண்ணினரான பிருமணர்கள் மிக எளிதாக கருவறைகளில் தங்களின் செத்துப் போன அருளாற்றலே இல்லாத சமசுகிருத மொழியில் பூசை செய்யும் துணிவையும், வசதிவாய்ப்பையும் பெற்று விட்டார்கள்.

அதாவது, மிக எளிதாக வடஆரியர்களின் சமசுகிருத மொழி தமிழ்மொழிக்குப் பதிலாக ஆட்சிமொழியாக்கப் பட்டுவிட்டது. இவர்களும் தங்களுக்குரிய அனைத்து விதமான வசதி வாய்ப்புக்களையும் பயன்படுத்தி அரசன் முதல் ஆண்டி வரை தங்களை சமுதாயத்தில் உயர்ந்தவர்களாக ஏற்கும்படிச் செய்து விட்டார்கள். இவர்கள் அழகான பால்வண்ண மேனியர்களாகவும், புதிய நாட்டில் வாழ வேண்டுமே என்ற அச்சத்தால் கட்டுப்பாடும் ஒற்றுமையும் மிகுந்தவர்களாகவும், எதையும் அறிவுக் கூர்மையால், சூழ்ச்சியாக செய்து முடிக்கும் ஆற்றலுடையவர்களாகவும் இருந்ததால் தங்களுடைய வேத மதத்துக்கு உரிய மடங்களையும், பீடங்களையும், சன்னிதானங்களையுமே

பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமத**த்துக்கும் தலைமைகளாக, வழிகாட்டிகளாக, வழித்துணைகளாக ஆக்கி விட்டார்கள்.

மிகத் துணிச்சலாக தங்களுடைய வேதமதத்திலிருந்துதான் **இந்துமதம்** பிறந்ததென்றும், தங்களுடைய சமசுகிருத மொழியிலிருந்துதான் தமிழ்மொழி பிறந்ததென்றும், **இந்துமதம்** சம்பந்தமான இலக்கியங்கள் அனைத்தும், சமசுகிருத மொழியிலிருந்துதான் வந்தனவென்றும் மாயையான கருத்தைத் தோற்றுவித்து வளர்த்து விட்டார்கள்.

[The new religion, language, literature and Philosophy of the Aryans founded the Pseudo *Hinduism*. It is a false and farce religion. It is full of wild imaginations and endless fairy tales. It is a non practical religion; so as to say, this Aryan religion namely the Hinduism is only a religion of myth with full of contradictions, confusions and improbabilities; It has only helped them to distance the Tamils from the True Religion namely the Induism which is founded by the Pathinensiddhars...”

**-Taken from the writings of Mr M.Palanisamy Pillai, His Holiness the Siddhar Kaakkaiyar]**

இதனுல் வடஆரியர்கள் உருவாக்கிய *பொய்யான ஹிந்துமதம்* மிகச் சிறந்த சாதனமாகப் பயன்பட்டு, பதினெண்சித்தர்கள் படைத்த **மெய்யான இந்துமதத்**தைத் தமிழர்கள் மறந்தும், துறந்தும், மறுத்தும், வெறுத்தும் செயல்படும்படிச் செய்து விட்டார்கள். அதாவது, **பூசை என்றாலேயே குருதிப்பலியும், இறைச்சிப் படையலும்தான்** என்ற பேருண்மையினை இந்துமதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும், கருவூலங்களாகவும், அருள் ஊற்றுக்களாகவும், ..... வாழும் தமிழர்களே

மறுத்தும், வெறுத்தும், மறந்தும், துறந்தும் செயல்பட ஆரம்பித்து விட்டார்கள். இதுதான் வடஆரியர்களான பிருமணர்களுக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி! வெற்றி!! வெற்றி!!!

இன்றைக்கு ஆதிபராசத்தித் திரைப்படத்திலேயே குருதிப் பலியும், இறைச்சிப் படையலும் மதவாழ்க்கைக்கு விரோதமானவை அல்லது தவறானவை என்ற கருத்து சித்தரிக்கப் பட்டுள்ளது. இந்த ஆதிபராசத்திக் கோயில் வட தமிழ்நாட்டில்தான் இருக்கிறது. இந்த வட்டாரத்தில்தான் மாரியம்மனும், பவானியம்மனும் ஆடி மாதம் முழுவதும் கொண்டாடப் படுகின்றன. அதுவும் **ஆடி மாத ஞாயிற்றுக் கிழமைகளில் அம்மனுக்கு கூழ்வார்ப்பது** என்ற பூசை ஒவ்வொரு வீட்டிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

அதாவது பெரியபாளையத்தாள் எனப்படும் பவானியம்மனையும், சென்னை வட்டாரத்திற்கே உரிய கருமாரியம்மனையும் *(குருமாரியம்மன், தருமாரியம்மன், திருமாரியம்மன் என்று மூன்று வகை மாரியம்மன்கள் உண்டு. அதாவது, பதினெண்சித்தர்கள் இந்துமதத்தில் 243 சத்திகளை, அதாவது பெண் தெய்வங்களை (Goddesses) கருச்சத்தி, குருச்சத்தி, தருச்சத்தி, திருச்சத்தி என்று ஒவ்வொன்றிலும் நான்கு வகையாகப் பிரித்திருக்கிறார்கள். உதாரணத்துக்கு - கருக்காளி, குருக்காளி, தருக்காளி, திருக்காளி, கருபவானி, குருபவானி, தருபவானி, திருபவானி, கருபகவதி, குருபகவதி, தருபகவதி, திருபகவதி, ... இவை போல்.)* பத்தியுள்ள குடும்பத்தவர்கள் ஞாயிற்றுக் கிழமையில் தங்கள் #தங்கள் வீட்டிற்கு அழைத்து விருந்து படைத்து மகிழ்வித்து வீழ்ந்து வணங்கித் தங்களைக் காப்பாற்றுமாறு வேண்டி அருள்நலம் பெற்றுக் கொள்ளுகிறார்கள்.

[# பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதத்**தில்தான் பத்தர்கள் கருவறை மூலவர்களை தங்கள் தங்களின் வீட்டிற்கு அழைத்துப் பூசிக்கும் முறை இருக்கிறது. ஆனால், மற்ற அனைத்து மதங்களிலும், வடஆரியர்களின் *பொய்யான ஹிந்துமதத்*திலும் கருவறை மூலவர்களைச் சென்றுதான் வணங்க வேண்டும். அல்லது மதத் தலைவர்கள் ஆங்காங்கே செய்கின்ற பூசைகளிலும், யாகங்களிலும்தான் சென்று வணங்க வேண்டும் என்ற மரபு இருக்கிறது. **இந்துமதத்**துக்கும், *ஹிந்துமதத்*துக்கும் உள்ள வேறுபாடுகளில் இது ஒரு குறிப்பிடத்தக்க சிறப்பான வேறுபாடு. அதாவது, *ஹிந்துமதம்* கடவுளை அரசனாகவும், முதலாளியாகவும், மனிதனை அடிமையாகவும் நினைத்து மக்களை அடிமையாக்குகிறது. ஆனால், **இந்துமதம்** கடவுளை, தான் அழைத்தவுடன் வந்து உதவுகின்ற நண்பனாகவும், தோழனாகவும், தொண்டனாகவும், காவற்காரனாகவும் நினைக்கின்றது.]

இப்படிப் பவானியம்மன்களையும், கருமாரியம்மன்களையும் மக்கள் தங்கள் தங்களின் வீடுகளுக்கு அழைத்து ஆட்டுக்கறி, கோழிக்கறி, மீன், கருவாடு, முட்டை, முருங்கைக்கீரை, முருங்கைக்காய், ... முதலியவற்றைச் சமைத்துப் படையலாகப் போட்டு வழிபாடு செய்கிறார்கள். இதை இன்றும் கூட கிராமப் புறங்களில் சென்று விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

அப்படியானால், ஆதிபராசத்தியைத் தவிர இந்த பவானியம்மனும், கருமாரியம்மனும் கடவுள்கள் இல்லையா? அவர்கள் “ஒரே தாய், ஒரே குலம்” என்று கூறுகிறார்களே, அச்சொற்றொடர்களில் உள்ள ‘தாய்’ என்ற சொல்லில் கருமாரியம்மனும், பவானியம்மனும் அடங்க மாட்டார்களா? மரக்கறி உணவுதான் அம்மனுக்குப் படைக்க வேண்டும் என்ற கருத்து ஆதிபராசத்தியாலேயே கூறப்பட்டதா? அந்த

ஆதிபராசத்தியை விட்டே கருமாரியம்மனுக்கும், பவானியம்மனுக்கும் இறைச்சியுணவு உண்ணக் கூடாது என்று அறிவுரை சொல்ல வைக்க முடியுமா? அல்லது ஆதிபராசத்தி பத்தர்களும், வார வழிபாட்டு மன்றத்தாரும் தங்கள் ஆதிபராசத்தி கோயில் இருக்கின்ற வட்டாரத்தில் மட்டுமாவது, அதாவது சென்னை மாநகர் உட்பட இந்த ஆடி மாதப் பூசையில் இறைச்சியுணவு படைக்கக் கூடாது, மரக்கறி உணவுதான் படைக்க வேண்டும் என்று அறிவிப்புச் செய்ய முடியுமா?

ஆண்டாண்டு காலமாக ஆடி மாதத்தில் கேழ்வரகுக் கூழ் காய்ச்சி, கொழுக்கட்டை செய்து, கருவாட்டுக் குழம்பு வைத்து (கருவாடு, முருங்கைக்காய், வேகவைத்த முழு முட்டை), மீன் வறுத்து, ஆட்டுக்கறி சமைத்து, வசதியுள்ளவர்கள் கோழியும் அறுத்துச் சமைத்து, வாசலில் வேப்பிலை, மாவிலைத் தோரணம் கட்டி சுற்று வட்டாரத்தையும், உறவினர்களையும் அழைத்துச் சாமி கும்பிட்டு; மேற்படி கூழ் வார்த்து சோறு போட்டு, கருவாடு, முருங்கைக்காய், முருங்கைக்கீரை, மீன், கறி, வேகவைத்த முழுமுட்டை, ஆட்டுக்கறி, கோழிக்கறி முதலியவை அனைவரோடும் சேர்ந்து பகிர்ந்துண்டு கருமாரியம்மன் அருளையும், பவானியம்மன் அருளையும் அநுபவப் பொருளாகப் பெற்று வாழ்வதுதான் **மெய்யான இந்துமதம்**. இதனை மறுப்பதும் வெறுப்பதும் எதிர்ப்பதும்தான் *பொய்யான ஹிந்துமதம்*.

எனவே, ஆதிபராசத்தி திரைப்படத்தில் இறைச்சியுணவுப் படையல் மறுப்புக் கொள்கையென்பது பிறமண்ணினரான வடஆரியரின் சூழ்ச்சியான *ஹிந்துமதக்* கொள்கையேயாகும். இந்தக் கொள்கை தவறானது, பொய்யானது, பயனற்றது; பதினெண்சித்தர்களின் நெறிக்குப் பகையானது; **மெய்யான இந்துமதத்**தைத் தோல்வி பெறச் செய்வது.

இப்பேருண்மையினை நம்மவர்கள் அனைவரும் புரிந்தும் புரியவைத்தும், பொதுமக்களிடம் துணிந்து எடுத்துக் கூறியும் செயல்பட்டால்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம் வளவளர்ச்சி பெறும். சமுதாயத்தில் ஆட்சி பெறும். செயல்படுக! செயல்படுக!! செயல்படுக!!!

**திருவோலை நாயகம்:**

அருள்மிகு தில்லைப் பொன்மன்றில் ஆடுகின்ற கூத்தர் பெருமான் சன்னிதானம் சித்தரடியார் ஏ. இரவி.

**நகலெடுத்தவர்:**

பன்னாரி மாரியம்மன் சன்னிதானம், கொல்லிமலை சிறுவாச்சியூர் மதுரக்காளியம்மன் சன்னிதானம், சித்தரடியாள் மெ. இலீலா [D/O, மெ.மெய்யப்பன், பசும்பொன் முத்துராமலிங்கர் மாவட்டம்-623001]

//உண்மை நகல்//

//மூலநகல்: கையெழுத்துப் பிரதியாகக் கிடைத்தது.//

"**இல்லற வாழ்வை** முறையாக வாழ்ந்து, நிறைவடைகிறவர்கள் ஆண்டவர்களாகிறார்கள்; இவர்களே தெய்வங்களாகவும், தேவர் தேவதைகளாகவும் கடவுளர்களாகவும் மாறுகிறார்கள்"

(இருக்குவேதம்: காண்டம்:1, மண்டலம்:8, நாள் உரைக்கோவை வாசகமலர்:24)

## **மெய்யான இந்துமதமும்** *பொய்யான ஹிந்துமதமும்*

# புராண வரலாறுகளில் ஏற்படுத்திய குழப்பங்கள்

1) **மெய்யான இந்துமத**த்தின் கீழ் இராம இராவண யுத்தம் பதினெட்டு (18) மாதங்கள் நடந்தது. *பொய்யான ஹிந்துமதத்தின்*படி இராம இராவண யுத்தம் பத்து நாட்கள்தான் நடந்தது. இப்படி ஒரு மாபெரும் பொய்யை பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்கள் தங்களுக்குப் புரிந்தும் புரியாததுமாக பதினெண்சித்தர்களில் ஒருவரான சித்தர் காகபுசுண்டரின் சூரிய குல வாரிசான இராமதேவரின் வரலாற்றைப் பற்றி மாபெரும் தவறான கருத்தைத் தங்களின் சமசுகிருத மொழி இலக்கியங்களில் கூறியுள்ளனர். இது பிதற்றலானது! பித்தலாட்டமானது! பிழையானது! ஆனால், அவர்கள் விரும்பியபடி இந்துமதத்தில் இருட்டடிப்பையும், குழப்பத்தையும் விளைவித்துள்ளது.

இப்படித்தான் பிருமணர்கள் இதிகாசங்களிலும், புராணங்களிலும், கதைகளிலும், காதைகளிலும், கவிதைகளிலும், கீதைகளிலும் எண்ணற்ற முரண்பாடுகளையும், கட்டுக் கதைகளையும் [கற்பனைகளையும்], வேறுபாடுகளையும், மாறுபாடுகளையும், திரிபுகளையும் தங்களின் விருப்பம்போல் புகுத்தி தங்களுடைய வேத நாகரீகத்தை *ஹிந்துமதம்* என்ற புதிய வடிவம் பெறச் செய்தனர்.

2) பதினெண்சித்தர்களின் குருபாரம்பரியத்தில் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நிகழ்ந்த போர் (18) பதினெட்டு ஆண்டுகள் நிகழ்ந்தது. மனிதனான இராமனுக்கும், அரக்கனான இராவணனுக்கும் நிகழ்ந்த போர் (18) பதினெட்டு மாதங்கள் நிகழ்ந்தது. மனிதர்களுக்கும் மாயசத்திக்கும் நிகழ்ந்த பாரதப் போர் (18) பதினெட்டு நாட்கள் நிகழ்ந்தது என்று மூன்று யுகத்தின் பெரும் போர்களைப் பற்றியக் குறிப்பு வழங்குகிறது.

3) ஆனால், முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்த கதையாக பிருமணர்கள் எனும் வடஆரியர்கள் இராம இராவண யுத்தம் 10 நாட்கள்தான் நிகழ்ந்தது என்று பொய்யுரைத்தனர். இந்தப் பொய்யினால் இந்தச் சூழ்ச்சிக்காரர்களின் சுரண்டல்களுக்கும், ஏமாற்றுக்களுக்கும் என்னென்ன வாய்ப்பு வசதிகள் பெருகின என்பதைச் சிந்தித்தால் போதும்; இன்றுள்ள தமிழர்கள் அனைவரும் இராமசரிதமாக, இராமகதையாக, இராமகாதையாக, இராமகாவியமாக (இராமகவிதையாக), இராமகீதையாக இருபத்தேழு (27) வண்ணங்களில் வாழுகின்ற சித்தர் இராமாயணம் பற்றிய பேருண்மைகள் தமிழர்கள் அனைவராலும் விரைந்தும் விரிந்தும் பேரார்வத்துடன் ஏற்றுப் போற்றிப் பேணப்பட வேண்டிய ஒன்று என்று விளங்கிடும்.

4) **இராமனும் தமிழனே! இராவணனும் தமிழனே!** இராமசரிதம் என்பது தமிழர்களுக்குள் நிகழ்ந்த ஒரு மாபெரும் போரின் வரலாற்று விளக்கமே. கங்கைக் கரையிலிருந்த நவநாத சித்தர் மரபினர் காக்கையர் வழிவந்த இராமதேவனுக்கும், இளமுறியாக் கண்டத்தின் எஞ்சிய சிறப்புமிக்க பகுதியான இலங்கையின் வேந்தன் இராவணனுக்கும் இடையே நிகழ்ந்த மாபெரும் போரே இராமகாதை. இது இரண்டாம் யுகமான திரேதகாயுகத்தின் மிகப்பெரிய வரலாற்று நிகழ்ச்சியையே அடிப்படையாகக் கொண்டதாகும். இதனை **மெய்யான**

வடிவில் அறிந்து கொள்ள **இந்துமதத்**தின் மிகப்பெரிய ஆச்சாரியாரான யக்ஞவல்லியின் குறிப்புகள் உதவுகின்றன.

5) இராம இராவண யுத்தத்தின் காலம் 18 மாதங்கள் என்பது பதினெண் சித்தர்களின் சிறப்பு எண்ணைக் குறிக்கின்றது என்பதால், அதனைப் பத்து நாட்கள் என்று குறைத்துக் கூறிய பிருமணர்கள்; சீதை இராமனில்லாமல் இலங்கையில் அசோக வனத்தில் 18 மாதங்கள் சிறையிருந்தாள் என்ற பேருண்மையினையும், இராமன் இலங்கைக்கு வந்த பிறகு போர் நிகழ்ந்த (18) பதினெட்டு மாதங்களும், ஆக அவள் இராமனைப் பிரிந்து 36 மாதங்கள் தனியாக இருந்தாள் என்று மிகத் தெளிவாகக் குருபாரம்பரியம் குறிக்கின்றது. ஆனால், பிருமணர்கள் பதினெண் சித்தர்களுக்குரிய 18 என்கின்ற எண் அல்லது எண்ணிக்கை இராமாயணத்தில் இருக்கக் கூடாது என்பதற்காக சீதை அசோக வனத்தில் இருந்த காலத்தை 10 மாதங்கள் என்று திரித்துக் கூறிவிட்டார்கள்.

குறிப்பு:- இந்த பிருமணர்கள் 18 மாதங்கள் நடந்த போரை பத்தே நாட்களில் நடந்தது என்று கூறியதைப் போல் 18 மாதங்கள் சிறையிருந்த சீதையின் காலத்தை 10 நாட்கள் என்று கூறாமல் நல்லகாலமாக 10 மாதங்கள் என்று கூறினார்கள். அதாவது, பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியரின் சமசுகிருதம் பத்து (10) என்ற எண்ணைச் சிறப்பாகக் கருதும் மரபுடையது என்பதால்தான் சீதை சிறையிலிருந்தது 10 மாதம், இராம இராவண யுத்தம் நடந்தது 10 நாட்கள் என்று கூறினார்கள். இவற்றை இன்றைய தமிழ்மொழித் தலைவர்களும், தமிழினத் தலைவர்களும் நன்கு புரிந்து கருத்துப் புரட்சி செய்தால்தான் தமிழினம் விழிச்சி, எழிச்சி, செழிச்சி, மலர்ச்சி பெறும்.

*(அடுத்த பக்கத்தில் கட்டுரை தொடர்கின்றது)*

## மெய்யான இந்துமதமும் *பொய்யான ஹிந்துமதமும்*

# ஆச்சாரியார்கள் பற்றிய உகப்புரட்டு

பிருமணர்களின் அண்டப்புளுகுகளும், ஆபாசப் பொய்களும் வடஆரிய வேதமதத்தின் காட்டுமிராண்டித் தனமான கற்பனைகளும்:-

I. குருபாரம்பரியம் பதின்மூன்று வகைச் சித்தியாளர்கள் என்று மிகத் தெளிவாகப் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

1) பத்தர், 2) பத்தியார், 3) புத்தர், 4) புத்தியார், 5) போத்தர், 6) போத்தியார் (*இவை இரண்டு மூன்று என்ற நிலையிலும் சில ஏடுகளில் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. அதாவது, பத்தர், பத்தியார், போத்தர், போத்தியார், புத்தர், புத்தியார் ... என்பதே வரிசையாகச் சில ஏடுகளில் உள்ளன*) 7) முத்தர், 8) முத்தியார், 9) சீவன்முத்தர், 10) சீவன்முத்தியார், 11) அருவ சித்தியார், 12) உருவ சித்தியார், 13) அருவுருவ சித்தியார், இப்படி 13 என்ற எண்ணிக்கை பதினெண்சித்தர்களின் **மெய்யான இந்துமதத்**தில் ஒரு சிறப்பான எண்ணுகக் குறிக்கப்படுகின்றது. இவர்களே 13 வகை ஆச்சாரியார்கள் ஆவார்கள்.

II. மேற்படி 13 என்ற எண்ணிக்கைப்படி முனிவர்களில் ஆச்சாரியார்கள் பதின்மூவர் என்று பட்டியலிட்டு 13 பேர்களின் பட்டியலைத் தருகிறது.

1) அத்திரி, 2) இத்திரி, 3) உத்திரி, 4) எத்திரி, 5) ஐத்திரி, 6) ஒத்திரி (இது மைத்திரி எனக் குறிக்கப்படுகிறது) 7) காத்திரி, 8) சாத்திரி, 9) தாத்திரி, 10) பாத்திரி, 11) நாத்திரி, 12) மாத்திரி, 13) வாத்திரி.

இந்த 13 பேர்களுடைய வரலாறுகளும் நான்கு யுகச் சித்தர்களின் இலக்கியங்களில் உள்ளன.

ஆனால், பிருமணர்களே இந்துமத ஆச்சாரியார்களாகி விட்டார்கள். இதனை ஆராய்ந்து, புரிந்து விளக்கம் கண்டு சித்தர்களின் இலக்கியங்களின் சான்றுகளோடும், ஊன்றுகளோடும் விளக்கியுரைத்துப் *பொய்யான ஹிந்துமதத்*தை எதிர்த்துப் போரிட்டு வீழ்த்தினால்தான் தமிழர்களின் **மெய்யான இந்துமதம்** விழிச்சி பெறும்! எழிச்சி பெறும்! செழிச்சி பெறும்! அதன் அடிப்படையில்தான் தமிழினம் வேத மத மாயைகளிலிருந்து விடுதலை பெறும்.

எனவே, **இந்துமதம்** என்பதனை வரலாற்றுப் பூர்வமாகவும், இலக்கிய பூர்வமாகவும், தத்துவப் பூர்வமாகவும், பாரம்பரியப் பூர்வமாகவும், சித்தர்களின் மரபு வழியாகவும் தெரிந்து, அறிந்து, ஆராய்ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, ஏற்றுச் செயலாக்கும் வல்லமை பெற்ற தலைவர்களால்தான் தமிழ்மொழியையும், இனத்தையும், நாட்டையும் காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்! அப்படியில்லாமல் வெறும் சொல் விளையாட்டுக்களில் ஈடுபட்டிருக்கும் தலைவர்களால் ஊசிமுனையளவு நன்மையைக் கூட தமிழ்மொழிக்கோ, தமிழ் இனத்துக்கோ, தமிழ் நாட்டுக்கோ, தமிழ் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளுக்கோ செய்ய முடியாது! செய்ய முடியாது!! செய்ய முடியாது!!!

<u>நகல் எடுத்தவர்:-</u>

அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம், அருள்மிகு தாத்தா மதுரை பாண்டிமுனீசுவரர் ஆதீனம், அருள்மிகு தேவி ஆலவாய்மூதூர் மீனாட்சி தம்பிரான், அருள்மிகு பாட்டி சோழியாயி திருவடி, அருள்மிகு தாத்தா பஃறுளியாற்றங்கரைக் கருவூரர் அருளாடு நாயகம், அருள்மிகு அனாதி சங்கராச்சாரியார் கணபாடிகள், பெரியவாள், காமகோடி தேவாச்சாரியார், அருள்மிகு தேவி ஆலவாய்மூதூர் தத்தனேரி சுடலைப் பத்திரகாளி சன்னிதானம், ஞானக்காட்சிச் செல்வன், ஞானக்காட்சி வழங்கு நாயகம், அருட்சேனை தளபதி, சித்தரடியான் ம.சி.இராமன், மதுரை-625010, 9-9-1985.

//இந்த மூலநகல் எழுதியவர்: சித்தரடியார் பழ.கோபால் மகன்.//

//உண்மை நகல்//

**தமிழினத்தில் மட்டும் எல்லாக் காலங்களிலும் திருவருட் செல்வர்கள், சித்தர்கள் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். குறிப்பாக எல்லா வகைச் சித்தர்களும், திருவருட் செல்வர்களும், அருளாளர்களும், ... தமிழினத்தில் மட்டும்தான் தோன்றியுள்ளார்கள். இதுபோலத் தமிழ்மொழி ஒன்றுதான் இம்மண்ணுலகில் சிறந்த வழிபாட்டு மொழியாகி எல்லாவகைச் சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் வழங்கக் கூடியதாக இருக்கின்றது.**

சென்னை-11
4-11-85

## ஓர் இந்துமத விளக்கம்

# இந்து மதமும் ஆச்சாரிய மரபும்

இந்துமதத்தால் பெயரிடப்பட்ட இந்தியாவில் இந்துமதத் தலைவர்களும்; இந்துமதத்தின் பெயரால் உள்ள கட்சித் தலைவர்களும்; இந்து மதக் கதைகளைக் கூறிப் பிழைப்பு நடத்தும் சொற்பொழிவாளர்களும்; இந்துமதத் தத்துவம், சித்தம், வேதம், மறை, முறை, நெறி, விதி, சட்டதிட்டக் கட்டுப்பாடு, ஒழுகலாறு, மரபு, பழக்க வழக்கம், கொள்கை, குறிக்கோள், நாதம், விந்து (வித்து), ... முதலியவற்றைப் பற்றிய பல கலக்கச் செய்திகளையும், கலவரச் செய்திகளையும், குழப்பச் செய்திகளையும், இருட்டடிப்புச் செய்திகளையும், குறைப்பு மறைப்பு மிகுந்த தவறான செய்திகளையும், **திரிபுச் செய்திகளையுமே** பெரும்பாலும் வழங்குகிறார்கள்.

எனவேதான், இந்துமத நிறுவனங்கள் (Institutions, Missionaries, Congregations, ... திருச்சபைகள், மடங்கள், பீடங்கள், சன்னிதானங்கள்) ஒன்றோடொன்று யார் பெரியவர்? யாருக்கு அதிக மரியாதை? யாருக்கு அதிகச் செல்வாக்கு? யார் உயர்ந்தவர்? ... என்று **தலைமைச் சண்டையில் இறங்கியிருக்கின்றனவே தவிர தத்துவச் சண்டையில் இறங்கவே இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!**

எனவேதான், மாற்றுமத ஆக்கிரமிப்புச் சண்டைகள், சாதிவெறிப் போர்கள், சமுதாய ஏற்றத் தாழ்வுக் கடுமைகள், மதத்தின் பெயரால்

நிகழும் கொள்ளைக்காரப் போக்குச் சுரண்டல்கள்; மதத்தால் வறுமையும், பசியும், நோயும் நியாயப் படுத்தப்பட்டு அடிமையுணர்வு வளர்க்கப்படும் அநாகரீகங்கள் ....... இந்துமதத்தில் பேயாட்டம் போடுகின்றன. இந்தப் பேய்களை விரட்டுவதற்கு இந்துமதத்தின் உண்மையான கருத்துக்களும், வாழ்வியல்களும், மரபுகளும், ...... மிகத் தெளிவாக வரலாற்றுப் பின்னணியில் இலக்கியச் சான்றுகளையும் ஊன்றுகளையும் கொண்டு விளக்கப்படல் வேண்டும். அதற்கு இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களின் நேரடி வாரிசுகளின் வாக்கும், வாக்கியமும், வாசகமும், வாழ்வியல் சாதனையும், போதனையும்தான் தலைமைதாங்கி வழிகாட்ட முடியும். அந்தப் பொன்னான வாய்ப்பு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

‘**இந்து மதம்**’ என்ற உடனேயே இந்துக்களும் மற்றவர்களும் ‘ஆதிசங்கராச்சாரியார்’ என்ற பெயரையும்; அவர் பெயரால் இந்தியாவிலுள்ள ஐந்து மடாதிபதிகளையும்தான் நினைக்கிறார்கள். எனவே, யார் மீதும் குற்றமோ! குறையோ! கறையோ! பழியோ! கூறாமல் இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்கள் என்னென்ன **ஆச்சாரிய மரபுகளை, பீடங்களை, வாள்களை** இந்துமத நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்காகவும் ஒழுங்குக்காகவும் உருவாக்கினார்கள் என்பதை வெளியிட முன்வந்துள்ளது **இந்து மறுமலர்ச்சி இயக்கம்**.

கடலுள் மறைந்த பெரும்பகுதி நிலப்பரப்பின் மிச்சமாக இருக்கும் தென்னிந்தியாதான் (விந்தியமலைக்குத் தெற்கே உள்ள பரப்பு) **மெய்யான இந்துமதம்** பிறந்து வளர்ந்து ஆட்சி செய்த நிலப்பரப்பு. இதுவும் சேர்ந்து **இளமுறியாக் கண்டம்** என்ற ஒரு பெரிய நிலப்பரப்புத் தோன்றி; இங்குப் பயிரினங்களும், உயிரினங்களும் இயல்பாகத் தோன்றிச் செழித்தன. அப்பொழுது, 1985ஆம் ஆண்டான இன்றைக்கு 43,73,086 ஆண்டுகளுக்கும் முன்பு விண்வெளியிலிருந்து

இம்மண்ணுலகுக்கு வந்த பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், மற்ற விண்வெளி அருட்குடும்பத்தார்களும் தோற்றுவித்ததுதான் **இந்துமதம்**. இதுதான் மண்ணின் ஈசர்களாக (தலைவர்களாக) விளங்கிய மணீசர்களைப் பக்குவப்படுத்தப் பட்டுப் பண்படுத்தப்பட்ட மனம் பெற்ற மனிதராக்கிற்று.

இந்த இந்துமதத்துக்கு **முதல் நிலையாக** 'கருவழி ஆச்சாரியார்கள்' என்று பதின்மூன்று பேர்கள் (1) அத்திரி (2) இத்திரி (3) உத்திரி (4) எத்திரி (5) ஐத்திரி (6) ஒத்திரி (7) காத்திரி (8) சாத்திரி (9) தாத்திரி (10) பாத்திரி (11) நாத்திரி (12) மாத்திரி (13) வாத்திரி உருவாக்கப்பட்டார்கள். இவர்கள், உலகெங்கும் சென்று தகுந்த அருள்நிலையுடைய பெண்டிரைத் தேர்ந்தெடுத்து மணந்து இனிய இல்லறம் நடத்திக் கருவழி வாரிசுகளை உருவாக்கினர்.

**இரண்டாவது நிலையாக**க் 'குருவழி ஆச்சாரியார்கள்' என்று பதின்மூன்று பேர்கள்; (1) பத்தர் (2) பத்தியார் (3) போத்தர் (4) போத்தியார் (5) புத்தர் (6) புத்தியார் (7) முத்தர் (8) முத்தியார் (9) சீவன்முத்தர் (10) சீவன்முத்தியார் (11) உருவச் சித்தியார் (12) அருவச் சித்தியார் (13) அருவுருவச் சித்தியார் உருவாக்கப் பட்டார்கள். இவர்கள், தங்களைக் குருவாக ஏற்றுப் பத்தி செய்பவர்களைச் சித்திபெறச் செய்து தங்களின் வாரிசுகளாக ஆக்கும் பணியை உலகம் முழுதும் செய்தார்கள்.

**மூன்றுவது நிலையாக**ப் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றும் காலத்தில் அவர்களே தேவைக்கேற்ப அருள்யோகமுடையவர்களைத் தேர்ந்தெடுத்துப் 'பதினெண்சித்தர் பீடாதிபதிவழி ஆச்சாரியார்கள்' என்று (48) நாற்பத்தெட்டு வகையினரைத் தோற்றுவிக்கும் வழிவகைகளை வகுத்தார்கள். இவர்கள் அல்லாச்சாரியார், ஆண்டவராச்சாரியார், இயவுளாச்சாரியார், இறையாச்சாரியார்,

தெய்வீகாச்சாரியார், கடவுளாச்சாரியார், தேவாச்சாரியார், பிறமாச்சாரியார் ... என்று நாற்பத்தெட்டு வகைப்படும்.

**நான்காவது நிலையாக** எட்டுவகை ஆச்சாரியார்களை, இம்மண்ணுலகப் பயிரின உயிரின வாழ்விற்கான (48) நாற்பத்தெட்டு இலட்சம் ஆண்டுகளில் தோன்றுவதற்குரிய செயல்திட்டத்தை ஏற்படுத்தினார்கள். இதன்படி, ஒவ்வொரு வகை ஆச்சாரியார்களிலும் நாற்பத்தெட்டுப் பேர்கள் தோன்ற வேண்டும்.

(1) சிவாச்சாரியார் - 48 பேர்கள் தோன்றிவிட்டார்கள்.

(2) ஆதிசிவாச்சாரியார் - 48 பேர்கள் தோன்றிவிட்டார்கள்.

(3) ஈசுவராச்சாரியார் - 48 பேர்கள் தோன்றிவிட்டார்கள்.

(4) ஆதிஈசுவராச்சாரியார் - 48 பேர்கள் தோன்றிவிட்டார்கள்.

(5) பரமாச்சாரியார் - 48 பேர்கள் தோன்றிவிட்டார்கள்.

(6) ஆதிபரமாச்சாரியார் - 48 பேர்கள் தோன்றிவிட்டார்கள்.

(7) சங்கராச்சாரியார் - இதுவரை (40) நாற்பது பேர்கள்தான் தோன்றியுள்ளார்கள். இன்னும் எட்டு (8) சங்கராச்சாரியார்கள் தோன்ற வேண்டும்.

(8) ஆதிசங்கராச்சாரியார் - இதுவரை (32) முப்பத்திரண்டு பேர்கள்தான் தோன்றியுள்ளார்கள். இன்னும் (16) பதினாறு ஆதிசங்கராச்சாரியார்கள் தோன்ற வேண்டும்.

குறிப்பு:- இவை குறிக்கும் ஆதிசங்கராச்சாரியார்களில் 32வது ஆதிசங்கராச்சாரியாராகத் தோன்றிச் செயல்பட்டவரே காலடி ஆதிசங்கராச்சாரியார். இவர் கி.பி.786க்கு மேல் 790க்குள் கருணீக்க சைவவேளாள மரபில் தோன்றிய தென்பாண்டித் தமிழரே. (அவரே தன்னைச் *'சௌந்தரிய இலாகிரி'*யில் **<u>திராவிட சிசு</u>** என்று குறிக்கிறார்).

இந்த எட்டுவகை ஆச்சாரியார்கள் மட்டும் தமிழினத்தில் மட்டும்தான் தோன்றுவர் என்பதே பதினெண்சித்தர் வாக்கு.

**பதினெண்சித்தர்கள் இந்துமதத்தைத் தங்களது தாய்மொழியான அண்டபேரண்டமாளும் அருளாட்சி அமுதத் தமிழில்தான் படைத்தார்கள். இதன் உயிராகப் பதின்மூன்று உயிர் எழுத்துக்களும்; உடலாகப் பதினெட்டு மெய் எழுத்துக்களும் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தினால்தான்; இந்துமதத்தின் உயிர்நிலைகளையும், மெய்நிலைகளையும் அநுபவமாகப் பெற முடியும். இவற்றின் விளக்கமாகவே கடந்த மூன்று யுகங்களின் வரலாறும் இந்த யுகத்தின் வரலாறும் உள்ளன.** எனவே, ஆச்சாரிய பரம்பரைகள், மரபுகள், நியதிகள், நீதிகள், விதிகள், நெறிமுறைகள், இயல்புகள்,... முதலியவற்றை வரலாற்றுக் கண்ணோட்டத்திலும், இலக்கிய வழியிலும், விஞ்ஞானச் சூழலிலும், பகுத்தறிவுப் போக்கிலும், மானுடநல நோக்கிலும்; தெரிய, அறிய, ஆராய, புரிய, உணர, தெளிய, ஒப்புக்கொள்ள ... முயல வேண்டும்! முயல வேண்டும்! முயல வேண்டும்! என்று வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

அன்பு

**இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், குருதேவர்,**
**அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம்,**
**குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார்,**
**பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி.**

நகல் எழுதியது:-

அன்பு தலைமைப்பணியாளர், சித்தர்மகன், சித்தரடியார், சித்தர் பதிலி சோ.இரவீந்திரன், 16/11/1985

//உண்மை நகல்//

//இதன் மூலநகல்: சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//

— — — — — — — — — — — —

சென்னை-11
6/11/85

# இந்துமத விளக்கவுரை

இந்துமத விளக்கம் என்ற பெயரில் **மெய்யான இந்துமதத்**தையும் *பொய்யான ஹிந்துமதத்*தையும் பற்றி விளக்கியுரைக்க வேண்டிய இன்றியமையாத, அவசியமான கடமையாகி விட்டது. ஏனெனில், கடந்த சில நூற்றுண்டுகளில் (கி.பி.1040 - கி.பி.1182 என்ற எல்லைக்கும் பிறகு) அன்னிய மதங்கள் இந்தியாவுக்குள் புகுந்து இந்துமதத்தவர்களில் பெரும்பாலானவர்களைக் கருத்துக் குழப்பத்திலும், செயல் தடுமாற்றத்திலும் சிக்க வைத்து மதம் மாற்றம் செய்து விட்டன. அதற்குக் காரணமே முறையான இந்துமத வரலாறும், நிறைவான இந்துமத விளக்கமும் நாட்டில் இல்லாமல் போனதுதான்.

அதாவது, *பொய்யான ஹிந்துமதத்*தால் காட்டுமிராண்டித் தனமான கற்பனைகளும், அண்டப்புளுகுகளும், ஆபாசப் பொய்களும், கவைக்குதவாத கற்பனைகளும், மூடநம்பிக்கைகளும், ஏமாற்றுக்களும், சுரண்டல்களும், முதலாளித்துவங்களும், சர்வாதிகாரப் போக்குகளும், அடிமை உணர்வும் மிகுந்து விட்டன. இவற்றிற்கு மேலாக சாதிவெறிகளும், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், வறுமையும் இந்துமதத்தால் நியாயப் படுத்தப்பட்டு விட்டன. எனவேதான், மக்கள் புதிய மதத்தை நாடிச் சென்று விட்டனர். எஞ்சியுள்ள இந்துக்களிலும் நாத்திகர்கள், கடவுள் மறுப்பாளர்கள், மதவெறுப்பாளர்கள் மிகுந்து விட்டார்கள்.

இந்த இருளையும், இன்னலையும் முழுமையாக அகற்றுவதற்காகத்தான் இந்துமதத் தந்தையாக (The Father of Induism) வாழையடி வாழையாக வந்துள்ள ஞாலகுரு சித்தர் கருவூரர் இவ்

விளக்கவுரையை நாடெங்கும் பரப்பி வருகின்றார். யாரையும், எவரையும், எந்தப் பிரிவு மக்களையும் **இந்துமதம்** - *ஹிந்துமதம்* கருத்துக்களால் பிரித்து வைக்க வேண்டும் என்பதல்ல நோக்கம். அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் செயல்படுகின்ற முறையிலேதான் விளக்கங்கள் எடுத்துக் கூறுகின்றோமே தவிர பெரியாருக்கு ஏற்பட்டது போல மாபெரும் தோல்வி, பழி, இழிவு வந்துவிடக் கூடாது என்ற மாபெரும் முயற்சியிலே ஈடுபட்டுள்ளோம். விரைந்தும், விரிந்தும் **இந்து** - *ஹிந்து* மதக் கருத்து வேற்றுமைகளின் மூலமே இந்துமதத்துக்கென வரலாற்றையும், புதிய வடிவமைப்பையும் தர முயலுகின்றோம்.

வறட்டுப் பிடிவாதமாக *ஹிந்துமதத்*தையும் அதற்குரிய சமசுகிருத மொழியையும் வலியுறுத்துபவர்களால் சனாதன தர்மமும், வடஆரிய மாயையும், வேதமத நாகரீகமும் காப்பாற்றப் பட்டுவிட முடியாது. இதற்கு நேர்மாறாக, *ஹிந்துமதம்* பற்றிய ஆராய்ச்சியில் பெரும்பாலானவர்களே நேரடியாக ஈடுபட்டு அதனுடைய பிற்போக்குத் தன்மைகளையும், குறைகளையும், கறைகளையும், சூழ்ச்சிகளையும், பயனற்ற நிலைகளையும் கண்டுபிடிப்பார்களேயானால் படிப்படியாக வேதமதத்தையும், சனாதன தர்மத்தையும், ஆரிய மாயைகளையும் எதிர்த்து முடிவில் பிராமணர்களையே எதிர்க்கக் கூடிய பயங்கரமான சூழ்நிலையே உருவாகிவிடும்.

எனவே, இன்றைய பிராமணர்களும் திருந்தி 3000 ஆண்டுகளுக்குட்பட்ட அவர்களுடைய *ஹிந்துமதத்தைத்* துறந்து விட்டு பதினெண்சித்தர்களால் (1985இல்) 43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் தோற்றுவிக்கப்பட்ட **மெய்யான இந்துமதத்**தையும், அருளுலக ஆட்சிமொழியான அமுதத் தமிழ்மொழியையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதனைப் புரிந்து கொள்ளாமல் ‘மதச்

சீர்திருத்தத்தின் மூலமே இந்துக்களே, இந்தியர்களே, இந்துமத மூலவர்களான தமிழர்களே நலப்படுத்த முடியும்' என்று முடிவெடுத்துச் செயல்பட்ட சொல்லடி நாயனுர் பெரியார் ஈ.வெ.ரா.வை **நாத்திகர்** என்று பட்டம் சூட்டி மிகப்பெரிய அளவில் வெற்றிகளேப் பெற முடியாமல் செய்தது போல்; ஆயிரமாயிரம் சித்தர்நெறிச் செல்வர்களும், இந்து மறுமலர்ச்சி இயக்கப் பணிகளும் வெற்றி பெறுவதைத் தடுத்துவிட முடியாது.

எனவே, அன்புகூர்ந்து **இந்துமதத்துக்கும்** *ஹிந்துமதத்துக்கும்* உள்ள வேற்றுமைகளேயும், முரண்பாடுகளேயும்; *ஹிந்துமதத்தின்* போலிநிலேகளேயும் விளக்கிடும் மாபெரும் கருத்துப் புரட்சிப் பணியில் அனேவரும் பங்கு பெற்றிடுமாறு அழைக்கின்றேம்.

**இந்துமதமே உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டினே உருவாக்கிடும்.**
**இந்துமதமே உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை அமைக்கும்.**

**தென்னுடைய சீவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

**அர அற நமப்பார்வதி பாதமே போற்றி**
**அர அற மகாதேவப் பாதமே போற்றி**

**ஓம் திருச்சிற்றம்பலம்.**

தலேமைப் பொறுப்பாளர்
**அங்காளப்பரமேசுவரி சன்னிதானம்**

<u>நகல் தயாரித்தவர்:-</u>

அன்பு / M.R.சீனிவாசன் RMP, 90, தென்கள்ளர் தெரு, முசிறி, திருச்சி Dt. 6-1-1986

//உண்மை நகல்//

//இதன் மூலநகல்: சித்தரடியான் M.R.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//

# புதிய வெளியீடுகள்

குருதேவர் அவர்களின் எழுத்துக்கள் அண்மைக் காலத்தில் பலராலும் விரும்பிப் படிக்கப் படுகின்றன. இயற்கையாக நிலத்தின் கீழ் உள்ள அழுத்தங்களால் வெளிப்படும் ஊற்று நீர் போல் குருதேவர் அவர்களின் மாணுக்கர்கள் ஆங்காங்கே குருதேவரின் எழுத்துக்களை அச்சிட்டு வெளியிட ஆரம்பித்துள்ளனர். பல காலம் பிறரை அச்சிடக் கூறியும் நடவாமல் தம் எழுத்துக்களைத் தாமே சிரமேற் கொண்டு அச்சிட்டார் குருதேவர் அவர்கள். இப்போதோ பலரும் தாமாகவே முன்வந்து அச்சிடுகின்றனர். இது மிகவும் பாராட்டுதற்குரியது.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற அடிப்படையில் எங்களுக்குக் கிடைத்த பிற வெளியீடுகளை இங்கே பட்டியலிட்டுத் தருகின்றோம். குருதேவர் அவர்களின் எழுத்துக்களை தேடிச் சென்று படிக்கும் ஆர்வம் உள்ளவர்கள் இந்தப் புத்தகங்களை வாங்கிப் படியுங்கள். பிறருக்குப் படிக்கக் கொடுங்கள்.

1. <u>புத்தகத்தின் தலைப்பு:-</u> **குருவாசகம்**

<u>கட்டுரைகள்:</u> குருவாசகம் முதல் பகுதி, திருவாசகம், ஏழாவது பதினெண்சித்தர் பீடாதிபதி கபாடபுரத்துக் கருவூரூரின் தருவாசகம்

<u>பக்கங்கள்:</u> 110, வண்ண அட்டை

<u>காணிக்கை:</u> ரூ.48/-

2. <u>புத்தகத்தின் தலைப்பு:</u> **சித்தர்நெறி வாசகங்கள்**

<u>கட்டுரைகள்:</u> சித்தர் நெறி வாசகங்கள், தீவாளித் திருநாள் பற்றி, சிரசுவதி பூசை

<u>பக்கங்கள்:</u> 53, வண்ண அட்டை

<u>காணிக்கை:</u> ரூ.27/-

இந்த இரு புத்தகங்களும் குருதேவர் அவர்களின் 78வது பிறந்த நாள் விழாவின் போது வெளியிடப் பட்டன.

3. புத்தகத்தின் தலைப்பு: **குடும்ப ஆண்டவர்களை பூசை செய்யும் நெறிமுறைகள்**
பக்கங்கள்: 64, வண்ண அட்டை
விலை: ரூ. 25.00
வெளியிட்ட காலம்: 2014 முதல் பதிப்பு

4. புத்தகத்தின் தலைப்பு: **பறித்த மலர்கள்**
கட்டுரைகள்: 18 வெவ்வேறு கட்டுரைகளின் தொகுப்பு.
பக்கங்கள்: 112, வண்ண அட்டை
விலை: ரூ.36/-
காலம்: 2014, குருதேவர் அவர்களின் 79வது பிறந்த நாள் வெளியீடு.

இந்த நான்கு புத்தகங்களுக்கும் வெளியீட்டாளர்:
இளமை மாறு இலக்கிய இயக்கம்
முகவரி: A 413, வைகுந்தம் அடுக்ககம், எண் 6, GST சாலை, கூடுவாஞ்சேரி - 603202,

5. புத்தகத்தின் தலைப்பு: **தெய்வீக மருத்துவம் அல்லது ஆவிகளும் மனிதர்களும்.**
1992இல் குருதேவர் அவர்கள் வெளியிட்ட புத்தகத்தின் மறுபதிப்பு இது.
வெளியிட்ட காலம்: 2014 மூன்றும் பதிப்பு
பக்கங்கள்: 88, வண்ண அட்டை
காணிக்கை: இல்லை.
புத்தகத்தை வழங்கியோர்: ஆலவாய் மாமூதூர் தத்தநெறி வார வழிபாட்டு மன்றம், மதுரை, தென்மண்டலம்.

6. <u>புத்தகத்தின் தலைப்பு:</u> **பதினெண்சித்தர் பீடாதிபதிகள் செந்தமிழில் வழங்கிய அருள்மிகு ஆஞ்சநேயர் காயந்திரி மந்திரங்கள்**
<u>பக்கங்கள்:</u> 12, வண்ண அட்டை
<u>காணிக்கை:</u> ரூ.11/-
<u>வெளியீடு எண்:</u> 104 / டிசம்பர் 2011

7. <u>புத்தகத்தின் தலைப்பு:</u> **பதினெண்சித்தர் பீடாதிபதிகள் வழங்கிய அருளூறு அமுத தெய்வீகச் செந்தமிழில் உள்ள காயந்திரி மந்திரங்கள்**
<u>பக்கங்கள்:</u> 64, வண்ண அட்டை
<u>விலை:</u> ரூ.48/-
<u>காலம்:</u> ஏப்ரல் 2013, அறிக்கை எண்: 107

<u>இந்த இரு புத்தகங்களுக்கும் வெளியீட்டாளர்:</u>
சித்தர் அரசயோகி கருவூறார் அறக்கட்டளை,
பதிவு எண்: 865/2011,
தருகுலம், சித்தர் நகர், வேம்படிதாளம், சேலம் மாவட்டம். PIN: 637504

8. புத்தகத்தின் தலைப்பு: **திருவிளக்கு பூசாமொழி**
பக்கங்கள்: 16, வண்ண அட்டை
காலம்: குறிக்கப் பட வில்லை.
விலை: இல்லை
தொடர்பு முகவரி:
அரசயோகி பற்காவல் மையம்
நெ.18, விவேகானந்தர் நகர், 120, பீட் ரோடு, கே.புதூர், மதுரை-625007.

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'

**காலம்:** பதினெண் சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்

**இந்துமத நூல்கள்:** 108 பூசை மொழி நூல்கள்,
48 பூசைவிதி நூல்கள்
96 தத்துவ நூல்கள்
144 செயல் சித்தாந்த நூல்கள்
36 குருபீட நூல்கள்

ஆக மொத்தம் 432 நூல்கள்

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

***இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்***

***அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.***

***அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.***

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்

முருகன், இராமன், கண்ணன்,..... பேசிய மொழி தமிழ்மொழியே!



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com